திரு. எல். இளையபெருமாள் : உறுப்பினர்களுக்கு விளக்கம் தெரிய வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவினைப் பொறுத்து, பல்வேறு வகையான கருத்துக்கள் பேசப்பட இருக்கின்றன. ஆனால், அரசாங்கத் தரப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில் சரியான விளக்கங்கள் இல்லை யென்பதால் உரிய விளக்கத்தை இப்பொழுது கூடச் சொல்லலாம். பதிலைப் பின்னால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1981), விளக்கத் தோடு இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். தற் போது ஒத்தி வைக்கப்படுகிறது.

8. அறிவிப்புகள்.

அ. நிலவள வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஏ. நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு 1981 (சட்ட மன்றப் பேரவை சட்ட முனவடிவு எண் 5/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு, நிலவரி வசூல் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்' என்று மொழிகிறேன்.

இந்தச் சட்டம் இரண்டு நோக்கங்களுக்காகக் கொண்டு வரப் பட்டிருக்கிறது. நிலவரி, தண்ணீர் தீர்வை கட்டுகிற பொழுது, கட்ட வேண்டியவர்கள் கட்டாவிட்டால், எவ்வளவு நாள் கட்டவில்லையோ, அதற்கு மாதத்திற்கு மாதம் வட்டி போட்டு

@1981ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 28 ஆம் தேதியிட்ட தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.